**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் நாள் செவ்வாய்கிழமை

CC. No. 342 of 2025

CNR No. TNTV15-001544-2025

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 1046/2021 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

எதிரி-1-பகலவன், 24/2026,
த/பெ. இந்திரஜித்,
MGR நகர்,
சேங்காலிபுரம்.
எதிரி-2-வெங்கடேஷ், 21/2026,
த/பெ. முத்துசாமி,
வெள்ளாளர் தெரு,
சேங்காலிபுரம்.
எதிரி-3-பாபு, 22/2026,
த/பெ. ரவி,
வடக்குத் தெரு,
சேங்காலிபுரம்.
எதிரி-4-பிரபாகரன், 26/2026,
த/பெ. பாண்டியன்,
வடக்குத் தெரு,
சேங்காலிபுரம். ----- எதிரிகள்

------



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:15 +0530

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.342 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Kodavasal PS. in Cr.No.1046/2021 |
| 3. | Name of the accused | I.Pagalavan<br>M.Venkatesh<br>R.Babu<br>P.Prabhakaran |
| 4. | Father's Name | S/o. Indirajith<br>S/o. Muthusamy<br>S/o. Ravi<br>S/o. Pandiyan |
| 5. | Occupation | - |
| 6. | Residence | A1-MGR Nagar, Sengalipuram<br>A2-Vellalar Street, Sengalipuram<br>A3-North Street, Sengalipuram<br>A4-North Street, Sengalipuram |
| 7. | Age | 24/2026<br>21/2026<br>22/2026<br>26/2026 |
| 8. | Date of occurrence | 04.11.2021 |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 05.11.2021<br>06.03.2023 |
| 10. | Date of apprehension | A1 and A3-06.11.2021 |
| 11. | Date of release on bail | A1 and A3-12.11.2021 |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:19 +0530

<table>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">08.04.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 17.04.2026 the accused questioned on substance of accusation U/s 147, 148, 294(b), 427, 352, 324,506(ii) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="7">15</td><td rowspan="7">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>21.04.26</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>21.04.26</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>21.04.26</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>27.04.26</td><td>-</td></tr>
<tr><td>PW5</td><td>27.04.26</td><td>-</td></tr>
<tr><td>PW6</td><td>07.05.26</td><td>07.05.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">13.05.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து 1 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 147,148,294(b),324 இதச-ன் கீழும், 2 மற்றும் 3 ஆம் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 147,148,324 இதச-ன் கீழும், 4 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 147,148,352 இதச-ன் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td colspan="3">No. The Judgment was uploaded on CIS portal and made available</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:24 +0530

| | | |
|---|---|---|
| | | in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சையது இம்ரான் அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்** :-

1. குடவாசல் காவல் சரகம் அன்னவாசல் ஆற்றாங்கரை தெருவை சேர்ந்த சாட்சி -5 ராம்கி என்பவர் கடந்த 04.11.2021 ந் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் மழவஞ்சேரி அருகே நடந்து சென்ற போது 1 ஆம் எதிரியும் அவனது நண்பர்களும் தகராறு செய்துள்ளார்கள். அதனை ராம்கி அன்னவாசல் ஊராட்சிமன்ற துவக்கப்பள்ளி அருகே நின்று சாட்சி -1 னிடமும் மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டு இருக்கும் போது அங்கு வந்த எதிரிகள் அவ்வழியே நடந்து சென்ற சகுந்தலா பாட்டி மீது மோதுவது போல் சென்றுள்ளார்கள். அதை தட்டிக்கேட்ட சாட்சி -2 மற்றும் 6 யை அவர்கள் திட்டியதால் சாட்சி -1 ஆனவர் ஏப்பா இப்படி திட்டிறீங்க என்று கேட்டதற்கு 1 ஆம் எதிரி சாட்சி -1 யை குச்சிக்காரி மகன்களை தேவடியா மகன்களே என திட்டியும், கையில் வைத்திருந்த கத்தியால் சாட்சி -1 முதுகில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1 ஆம் எதிரி அங்கு கிடந்த கட்டையை எடுத்து சாட்சி -2 கெளதமையும், சாட்சி 4 தாமோதரனையும், சாட்சி -9



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:28 +0530

வசந்தையும், அடித்து காயப்படுத்தியும், 3 மற்றும் 4 ஆம் எதிரிகளாகிய நீவிர் கல்லால் சாட்சி-3 குமரகுருவையும் சாட்சி-5 ராம்கியையும் அடித்து காயம்படுத்தியும், 5 ஆம் எதிரி கையாலும், காலாலும் சாட்சி -7 மதியழகனையும் சாட்சி -8 கதிரசேனையும் அடித்து காயப்படுத்தியும் குற்றம்புரிந்துள்ளதால் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 427, 352, 324,506(ii) IPC ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் 1 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 147,148,294(b),324 இதச-ன் கீழும், 2 மற்றும் 3 ஆம் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 147,148,324 இதச-ன் கீழும், 4 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 147,148,352 இதச-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தன் மீதான குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:33 +0530

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா அன்னவாசல் கிராமத்தில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி சரியாக நினைவில்லை 06.00 மணியளவில் தானும், தனது மகன் கௌதமனும், குமரகுரு, தாமோதரன் என்பவரும் நடந்து சென்று கொண்டிருந்த போது சுமார் பத்து பேர் கூட்டமாக சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், தாங்கள் அவ்வழியில் சென்ற போது கூட்டத்தில் சில பேர் தங்களை தாக்கினார்கள் என்றும், அதில் தங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் அவர்கள் மீது புகார் கொடுத்தேன் என்றும், மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா அன்னவாசல் கிராமத்தில் வசித்து வந்து பெய்ண்டர் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தஎனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:37 +0530

ஊரை சேர்ந்தவர்கள் என்றும், அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், அவர் தனது தகப்பனார் ஆவார் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி சரியாக நினைவில்லை 06.00 மணியளவில் தான், லெட்சுமணன், தாமோதரன், குமரகுரு ஆகியோர் நடந்து சென்று கொண்டிருந்த போது சுமார் பத்து பேர் கூட்டமாக சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், தாங்கள் அவ்வழியில் சென்ற போது கூட்டத்தில் சில பேர் தங்களை தாக்கினார்கள் என்றும், அதில் தங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா அன்னவாசல் கிராமத்தில் வசித்து வந்து பெய்ண்டர் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், அவர் தனது சித்தப்பா ஆவார் என்றும், அ.சா.2 ஐ தனக்கு தெரியும் என்றும், அவர் தனது தம்பி ஆவார் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி சரியாக நினைவில்லை நேரம் சரியாக நினைவில்லை தான், லெட்சுமணன், கௌதமன் மற்றும் குமரகுரு ஆகியோர் நடந்து சென்று கொண்டிருந்த போது சுமார் பத்து பேர் கூட்டமாக சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், தாங்கள் அவ்வழியில் சென்ற போது கூட்டத்தில் சில பேர் எங்களை தாக்கினார்கள் என்றும், அதில் தங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா அன்னவாசல் கிராமத்தில் வசித்து வந்து தனியார் கம்பெனியில் ஊழியராக



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:41 +0530

வேலை செய்து வருகிறேன் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், அவர் தனது சித்தப்பா ஆவார் என்றும், அ.சா.2 ஐ எனக்கு தெரியும். அவர் எனது உறவினரர் ஆவார். அ.சா.3 ஐ எனக்கு தெரியும். அவர் எனது ஊரை சேர்ந்தவர் ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தேதி சரியாக நினைவில்லை இரவு சுமார் 8.00 - 9.00 மணியளிவல் நான், லெட்சுமணன், கௌதமன் மற்றும் தாமோதரன் ஆகியோர்கள் நடந்து சென்று கொண்டிருந்த போது சுமார் பத்து பேர் கூட்டமாக சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அவ்வழியில் சென்ற போது கூட்டத்தில் சில பேர் எங்களை தாக்கினார்கள். அதில் எங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(v) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.5 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா அன்னவாசல் கிராமத்தில் வசித்து வந்து தனியார் கம்பெனியில் ஊழியராக வேலை செய்து வருகிறேன் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்களை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி சரியாக நினைவில்லை மாலை நேரத்தில் தான், லெட்சுமணன், கௌதமன், தாமோதரன் மற்றும் குமரகுரு ஆகியோர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்த போது சுமார் பத்து பேர் கூட்டமாக சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், தாங்கள் அவ்வழியில் சென்ற போது கூட்டத்தில் சில பேர் எங்களை தாக்கினார்கள் என்றும், அதில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சிமளித்துள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:45 +0530

(vi) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.6 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 2021 ம் ஆண்டு குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கமலநாதன் மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான காவல் ஆய்வாளர்கள் திரு. கருணாநிதி மற்றும் திரு. ராஜ் என்பவர் தற்போது சிறப்பு உதவி ஆய்வாளர் கமலநாதன் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.கருணாநிதி ஆகியோர்கள் தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளதாலும், காவல் ஆய்வாளர் திரு.ராஜ் என்பவர் தற்போது வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாலும், மேற்படி காவல் ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் நீதியின் நலன் கருதி காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றும், கடந்த 05.11.2021ம் தேதியன்று குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கமலநாதன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது குடவாசல் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த வாஞ்சிநாதன் மகன் லட்சுமணன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்.1046/2021 இதச சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 427, 352, 324,506(2) ன் கீழ் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், சமாதான மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், சமாதான மனுவில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், சமாதான மனுவில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், சமாதான மனுவில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:49 +0530

அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**) என்றும், பின்னர் இவ்வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திரு.கருணாநிதி அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், மேற்படி காவல் ஆய்வாளர் திரு. கருணாநிதி இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 18.00 மணியளவில் சம்பவ இடமான அன்னவாசல் ஊராட்சி மன்ற தொடக்க பள்ளி அருகே சென்று சாட்சிகள் குமார் மற்றும் கணேசன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், (**பார்வை மகசர் அ.சா.ஆ.8 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் சம்பவம் உண்மை என்று தெரிய வர எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் பகலவன், பாபு ஆகியோர்கள் குடவாசல் பஸ் ஸ்டான்ட் அருகே நின்று கொண்டிருந்தவரை அன்றைய தினமே 19.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார் பின்னர் காவல் ஆய்வாளர் திரு.கருணாநிதி என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்ட படியால் இவ்வழக்கு கோப்பினை காவல் நிலைய வசத்திலேயே வைத்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட திரு.ராஜ் என்பவர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த போது காவல் ஆய்வாளர் திரு.கருணாநிதியிடம் கூறிய அதே சங்கதிகளே கூறியதால் அவர் எவ்வித மறு வாக்குமூலமும் பெறவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட லட்சுமணன், கௌதமன், குமரகுரு ஆகியோர்ளுக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும் மற்றும் காயம்பட்ட கௌதமன் மற்றும்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:54 +0530

குமரகுரு ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்தும், காயம்பட்ட லட்சுமணன் என்பவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த குடவாசல் அரசு மருத்தவமனை மருத்துவர் திரு. மணிவண்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றினை பெற்று தாக்கல் செய்துள்ளார் என்றும், (**கௌதமன் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய கருத்துரை அ.சா.ஆ. 10 ஆகவும், குமரகுரு என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய கருத்துரை அ.சா.ஆ. 11 ஆகவும், லெட்சுமணன் என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ. 12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) என்றும், மேற்படி மருத்துவரின் கருத்துரையின் அடிப்படையில் காயம்பட்ட கௌதமன் மற்றும் குமரகுரு ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என்று கருத்துரை வழங்கியுள்ளார் என்றும், மேலும், இவ்வழக்கில் காயம்பட்ட லட்சுமணன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக பரிந்துரை செய்துள்ளார் என்றும், அந்த பரிந்துரையின் அடிப்படையில் காயம்பட்ட லட்சுமணன் என்பவர் சிகிச்சைக்காக சென்ற அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்து மருத்துவ சட்டக் கருத்துரை வழங்கிய திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் திருமதி.நித்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், (**லட்சுமணன் என்பவருடைய மருத்துவ சட்டக்கருத்துரை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்றும், மேலும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற எதிரிகளான வெங்கடேஷ், பிராபாகரன் ஆகியோர்களை தேடி வந்த நிலையில் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சமூக நீதிமன்றத்தில் ஆஜராகி தக்க சட்ட வழிகாட்டுதலுடன் பிணையில் விடுவிக்கபட்டுள்ளார்கள் என்ற விவரத்தினை தெரிந்து கொண்டுள்ளார் என்றும், மேலும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட விஷ்ணு மற்றும் ஈஸ்வரன் ஆகியோர்கள் இளம்பிழையாளி



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:05:58 +0530

என்று தெரிய வந்ததால் அவர்களை கையகப்படுத்தி திருவாரூர் இளஞ்சிறார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார் என்றும், மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கமலாநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் ஈடுபட்ட இளம்பிழையாளிகள் விஷ்ணு மற்றும் ஈஸ்வரன் மீது திருவாரூர் இளஞ்சிறார் நீதிகுழுமத்தில் தனிக் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 427, 352, 324, 506(2) ன் கீழ் தண்டித்தக்க குற்றமென கடந்த 06.03.2023 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றும் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(3)-ன் படி வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் குவிமுச பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:06:02 +0530

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. **அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான லட்சுமணன், குடவாசல் காவல் சரகம் அன்னவாசல் ஆற்றாங்கரை தெருவை சேர்ந்த சாட்சி -5 ராம்கி என்பவர் கடந்த 04.11.2021 ந் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் மழவஞ்சேரி அருகே நடந்து சென்ற போது 1 ஆம் எதிரியும் அவனது நண்பர்களும் தகராறு செய்துள்ளார்கள். அதனை ராம்கி அன்னவாசல் ஊராட்சிமன்ற துவக்கப்பள்ளி அருகே நின்று சாட்சி -1 னிடமும் மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டு இருக்கும் போது அங்கு வந்த எதிரிகள் அவ்வழியே நடந்து சென்ற சகுந்தலா பாட்டி மீது மோதுவது போல் சென்றுள்ளார்கள். அதை தட்டிக்கேட்ட சாட்சி -2 மற்றும் 6 யை அவர்கள் திட்டியதால் சாட்சி -1 ஆனவர் ஏப்பா இப்படி திட்டிறீங்க என்று கேட்டதற்கு 1 ஆம் எதிரி சாட்சி -1 யை குச்சிக்காரி மகன்களை தேவடியா மகன்களே என திட்டியும், கையில் வைத்திருந்த கத்தியால் சாட்சி -1 முதுகில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1 ஆம் எதிரி அங்கு கிடந்த கட்டையை எடுத்து சாட்சி -2 கௌதமையும், சாட்சி 4 தாமோதரனையும், சாட்சி -9 வசந்தையும், அடித்து காயப்படுத்தியும், 3 மற்றும் 4 ஆம் எதிரிகளாகிய நீவிர் கல்லால் சாட்சி-3 குமரகுருவையும் சாட்சி-5 ராம்கியையும் அடித்து காயம்படுத்தியும், 5 ஆம் எதிரி கையாலும், காலாலும் சாட்சி -7 மதியழகனையும் சாட்சி -8 கதிரசேனையும் அடித்து காயப்படுத்தியும் குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:06:07 +0530

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா அன்னவாசல் கிராமத்தில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி சரியாக நினைவில்லை 06.00 மணியளவில் தானும், தனது மகன் கௌதமனும், குமரகுரு, தாமோதரன் என்பவரும் நடந்து சென்று கொண்டிருந்த போது சுமார் பத்து பேர் கூட்டமாக சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், தாங்கள் அவ்வழியில் சென்ற போது கூட்டத்தில் சில பேர் தங்களை தாக்கினார்கள் என்றும், அதில் தங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் அவர்கள் மீது புகார் கொடுத்தேன் என்றும், மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், பாதிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.4 ம், கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 ம் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில் அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:06:12 +0530

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.6-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றவாளி என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும், இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு கு.வி.மு.ச பிரிவு 320-ன் கீழ் ஒரு மனுவினை தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த சமாதான மனுவில் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துள்ளதையும் காணமுடிகிறது.

16. இந்நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *Madan Mohan Abbot Vs State of Punjab reported in (2008) 4 SCC 582 : (2008) 2 SCC (Crl.) 464* என்ற வழக்கில் வழங்கியுள்ள முன்தீர்ப்பில் பத்தி 5-ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும், எதிரியுடன் சமாதனமாக செல்லும்போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு :

> *"….We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a*



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:06:16 +0530

*common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law."*

17. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. எனவே, இவ்வழக்கில் 1 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 147,148,294(b),324 இதச-ன் கீழும், 2 மற்றும் 3 ஆம் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 147,148,324 இதச-ன் கீழும், 4 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 147,148,352 இதச-ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>உத்தரவு</u>**

19. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 147,148,294(b),324 இதச-ன் கீழும், 2 மற்றும் 3 ஆம் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 147,148,324 இதச-ன் கீழும், 4 ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 147,148,352 இதச-ன் கீழும் வனையப்பட்ட



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:06:21 +0530

குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மே திங்கள் 26-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:06:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. லெட்சுமணன்-புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. கௌதமன்-பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திரு. தாமோதரன்- பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.4 | திரு. குமரகுரு- பாதிக்கப்பட்ட |
| அ.சா.5 | திரு. கோபிநாத்-உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.11.2021 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | 21.04.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 21.04.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.2-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 21.04.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.3-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 21.04.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.4-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | 04.11.2021 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.7 | 05.11.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 05.11.2021 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.9 | 05.11.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | 04.11.2021 | கௌதமன் என்பவருடைய விபத்து பதிவேடுடன் கூடிய கருத்துரை |
| அ.சா.ஆ.11 | 04.11.2021 | குமரகுரு என்பவருடைய விபத்து பதிவேடுடன் கூடிய கருத்துரை |
| அ.சா.ஆ.12 | 04.11.2021 | லெட்சுமணன் என்பவருடைய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.13 | 04.11.2021 | லெட்சுமணன் என்பவருடைய மருத்து சட்டக் கருத்துரை |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:06:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | எதிரி 1 மற்றும் 3-06.11.2021 முதல் 12.11.2021 |

| | | |
|---|---|---|
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 19.12.2025 |
| 3. | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 17.04.2026 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | எதிரி தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் 21.04.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. |
| | | அரசு தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 311-ன் கீழ் 07.05.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 5. | சாட்சிகள் விசாரணை | |

| Witness | Date of Chief | Date of Cross |
|---|---|---|
| PW-1 : | 21.04.26 | - |
| PW-2 : | 21.04.26 | - |
| PW-3 : | 21.04.26 | - |
| PW-4 : | 27.04.26 | - |
| PW-5 : | 27.04.26 | - |
| PW-6 : | 07.05.26 | 07.05.26 |

| | | |
|---|---|---|
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 20.05.2026 |
| 7. | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விபரம் | - |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | - |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:06:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.